# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.71/2022

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுலை மாதம் 30 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஏகநாதன் | மதம் | : இந்து |
| த/பெ | : கிருஷ்ணமூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 40 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : MRF நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**30.07.2026**

**பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வழக்கு தாக்கல் செய்துள்ள வாதி கல்யாண குமாரை தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி மணி எனக்கு என்ன உறவு என்றால் நான் அவரது மகளை திருமணம் செய்துள்ளேன். அவர் எனக்கு மாமா ஆகும். எனக்கு சொந்த ஊர் எது என்ன என்றால் பெரிய கடம்பூர் ஆகும். திருத்தணிக்கு வந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் 15 வருடங்கள் ஆகிறது. தாவா சொத்தின் பழைய புல எண்.307/2 என்றால் சரிதான். புல எண்.307/2ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 50 செண்ட் என்றால் தெரியும். தாவா சொத்தின் புதிய புல எண்.307/2A1A என்றால் சரிதான். அது மீண்டும் புல எண்.307/2A1E1 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்துள்ள இடம் காலியிடம் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்து கிழமேல் 66 அடி தென்வடல் 45 அடி என்றால் சரிதான். வழக்கு சொத்தில் 6 அடி உயரத்திற்கு சுற்றுச்சுவர் எழுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு பின்னால் உள்ளது பாறை புறம்போக்காகும். வழக்கு சொத்திற்கு மேற்கு பக்கம் முனியம்மாள் சொத்து என்றால் கோவிந்தராஜ் இடமாகும். வழக்கு சொத்திற்கு மேற்கு பக்கம் முனியம்மாள் சொத்து என்றால்

இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எங்கள் வீட்டிற்கு மேற்கேதான் கோவிந்தராஜ் உள்ளார் என்றாலும் வழக்கு சொத்திற்கு மேற்கே முனியம்மாள் இடம்தான் உள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்திற்கு மேற்கு பக்கம் முனியம்மாள் சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கிழக்கே பட்டா நிலமும் குட்டை புறம்போக்கும் உள்ளது என்றால் குட்டை புறம்போக்கு உள்ளது. புல எண்.307/2 பட்டா நிலமா என்றால் பட்டா நிலம்தான். வழக்கு சொத்திற்கு தெற்கே புல எண்.307/6ல் குட்டை புறம்போக்கு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் சின்னசாமி ரெட்டி, அன்புரோஸ் மற்றும் எங்கள் வீடு உள்ளது என்றால் சரிதான்.

3. தாவா சொத்தை ஒட்டி சின்னப்பா வீடு, அதற்கு வடக்கே அன்புரோஸ் வீடு, அதற்கும் வடக்கேதான் என் வீடு என்றால் சரிதான். 3வதாகதான் எங்கள் வீடு உள்ளது. எங்கள் வீட்டிற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் 11.10.2017ல் கிரையம் வாங்கினேன். நான் என்ன நான்கு எல்லை குறிப்பிட்டு வாங்கினேன் என்பதை சொல்ல முடியுமா என்றால் **(சாட்சியிடம் பி.வா.சா.ஆ 7 ஆவணம் கொடுக்கப்பட்டது)** புல எண்.307/2ல் கிழமேல் 22 அடி தென்வடல் 60 அடி. கிழக்கில் சுப்பிரமணிய பிள்ளை மனைவி சிவகாமி மனை, மேற்கில் முருகேச ரெட்டி மனை, வடக்கே 12 அடி அகலம் பொது ரோடு, தெற்கே சூரிகாபுரம் முருகேச ரெட்டி மனைகள் என உள்ளது. எனது பி.வா.சா.ஆ 7 ஆவணத்தில் உள்ள நான்கு எல்லைகள் சரியானது என்றால் ஆமாம்.

4. சூரிகாபுரம் முருகேசன் நிலமும் பட்டா நிலம் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5ல் புல எண்.307/2A1E இதன் விஸ்தீரணம் 1320 சதுரடிகள் கிழக்கில் நாகராஜன், மேற்கில் கோவிந்தராஜன், வடக்கே 12 அடி சாலை, தெற்கே அரசுக்கு சொந்தமான பாறை புறம்போக்கு புல எண்.307/6 என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரைய ஆவணத்தில் சூரிகாபுரம் முருகேச ரெட்டி மனைகள் என குறிப்பிட்டுவிட்டு

பிரமாண வாக்குமூலத்தில் அரசுக்கு சொந்தமான பாறை புறம்போக்கு புல எண்.307/6 என சொல்லியுள்ளதில் எது உண்மை என்றால் தெற்கே பாறை புறம்போக்கு என உள்ளதுதான் சரியானது. நங்கள் ரவிக்குமாரிடம் இருந்து வாங்கும்போது அவர் பத்திரத்தில் இருந்ததை அப்படியே எழுதிவிட்டோம். தற்போது பாறை புறம்போக்குதான் உள்ளது. நான் கிரைய ஆவணத்தில் உள்ள விவரங்களுக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)